★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No: QB/8945/78

மலர்: 20 தை 20 ரபி–அவ் 4 இதழ் 353
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 2-2-79

● சகல வைபவங்களுக்கும் உரிய அன்பளிப்புப் பொருட்கள்
● தையல் வேலைகளுக்குரிய நூல் வகைகள், உபகரணங்கள்
● காது கேட்கும் கருவிகள் [HEARING AIDS]
● பெண்களின் அழகிய கைப்பைகள்
யாவற்றையும் சகாய விலையில் பெற்றுக்கொள்ள!
இருபா கிவ்ற் கவுஸ்
46, பெரியகடை யாழ்ப்பாணம்.
KIRUBA GIFT HOUSE,
46, Grand Bazzar Jaffna.

## கருணாநிதி கொலைமுயற்சி இளைஞர் கைது!

சென்னை, பெப். 1

தமிழ்நாடு சட்டப்பேரவை எதிர்க்கட்சித்தலைவரும் தி. மு. கழகத் தலைவருமான திரு மு. கருணாநிதியை கொலைசெய்ய முயன்றதாக ஒரு தையல் தொழிலாளியான இளைஞர் கைதுசெய்யப்பட்டார்.

திரு கருணாநிதி திருநெல்வேலியில் கூட்டமொன்றில் பேசுவதற்காக காரில்சென்று கொண்டிருந்தபோது தாராபுரத்தில் வைத்து இரும்புக் கம்பியொன்றை அந்த வாலிபர் காரின்மீது வீசினர். காரின் முன்கண்ணாடி நொருங்கிவிட்டது. ஆனல் கருணாநிதி காயம் எதுவுமின்றி தப்பினர்.

திரு கருணாநிதியை கொலை செய்ய முயன்றதாக அந்த வாலிபர்மீது வழக்குத் தொடரப்படவிருக்கிறது.

# சி. ஐ. டி. கான்ஸ்டபிள் சுட்டுக்கொலை!

## கொக்குவிலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

இரகசியப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ஒருவர் நேற்று காலையில் கொக்குவிலில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொழும்பில் கடமையாற்றிய இந்த கான்ஸ்டபிளின் பெயர் ஆனந்தநடராசாஞான சம்பந்தன் வயது42) என்பதாகும். சைக்கிளில் வந்த இளைஞர்கள் இருவரால் இவர் கைத்துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது

கொலையுண்டவர் சுமார் ஒரு வார லீவில் கொக்குவிலுக்கு வந்திருந்தாரென்றும், நேற்றுக் காலை 9 மணியளவில் சிவில் உடையில் நால்வருடன் கதைத்துக்கொண்டு வந்த போது இச்சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது.

சைக்கிளில் வந்த நீண்ட முடி வளர்த்த இரு இளைஞர்கள், இவருக்கு அருகில் வந்ததும் நீர்தான் சம்பந்தன் எனக் கேட்டதும், திடீரெனக் கைத்துப்பாக்கியால் சுட்டுவிட்டு. சைக்கிளில் ஒடி மறைந்துவிட்டார்கள் என்றும் இச் சம்பவம்பற்றிக் கூறப்படுகிறது.

இவருடன் கதைத்துக் கொண்டுவந்த இருவர் பொலிஸாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

கொக்குவில் அப்பட்ட பாலத்தடி கோவில் வீதிக்கருகில் இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடைபெற்றது.

சம்பந்தரை வீட்டிலிருந்து நான்கு இளைஞர்கள் அழைத்துவந்தபோது வெளிநாடு செல்வதற்கான அனுமதிப்பத்திரம் எடுத்துத்தரும்படி அவருடன கதைத்ததாகவும் இச்சம்பவம் தொடர்பாகக் கூறப்படுகிறது.

இளைஞர்கள் கொக்குவிலிலுள்ள அவரது வீட்டிலிருந்து கால் மைல் தூரம் கூட்டிவந்தார்களென்றும் கூறப்படுகிறது.

இக்கொலை தொடர்பானது எனக் கருதப்படும் சைக்கிள் ஒன்று மதகுக்குக்கீழிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவரை வீட்டிலிருந்து அழைத்துவந்த 4 இளைஞர்களில் இருவர் பொலிசாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது

ஸ்தலத்திற்கு விரைந்த ஆனைக்கோட்டைப் பொலிசாரும், யாழ்ப்பாணப் பொலிசாரும் விசாரணையை மேற்கொண்டுள்ளனர், பொலிஸ் அதிபரும், இராணுவ அதிகாரி

[6-ம் பக்கம் பார்க்க]

## விசாரணை நடுவில் எதிரி விடுதலை

(யாழ்ப்பாணம்)

சரவணை கொலைமுயற்சி வழக்கில் சாட்சிய முரண்பாட்டால் விசாரணை நடுவில் எதிரி விடுதலைசெய்யப்பட்டார்.

# பகிஷ்கரிப்பை கூட்டணிநடத்தவில்லை —அமிர்

[யாழ்ப்பாணம்]

புதிய பல்கலைக்கழக அனுமதியை எதிர்த்து தமிழ் மாணவர் இயக்கங்களே பாடசாலை பகிஷ்கரிப்பைநடத்துகின்றன. பகிஷ்கரிப்பு இயக்கத்தை தமிழர் விடுதலைக்கூட்டணி நடத்துவதாக சில பத்திரிகைக்குறிப்புகள் தவருனது. இதைநான் முற்றுமுழுதாக நிராகரிக்கின்றேன்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு அ. அமிர்தலிங்கம், பாடசாலை பகிஷ்கரிபபுத் தொடர்பாக சில பத்திரிகைகளில் வெளிவந்த செய்திபற்றி விடுத்தஅறிக்கையில் இவ்வாறு தெரிவித்தார். [செ]

### நகரப்புறத்தைவிட கிராமப்பகுதிகளில்

# பகிஷ்கரிப்பு இயக்கம் நூறுவீதம் வெற்றி!

## வழமைபோல் ஆசிரியர்கள் வருகை

(யாழ்ப்பாணம்)

தரப்படுத்தலை எதிர்த்து மாணவர் இயக்கங்களும், தமிழ் இளைஞர் பேரவையும் யாழ். பல்கலைக்கழக மாணவரும் நடத்திய பாடசாலைப் பகிஷ்கரிப்பு, நகரப் புறங்களிலும் பார்க்க கிராமப்புறங்களில் நூற்றுக்கு நூறு வீதம் வெற்றியளித்துள்ளது

கிராமப்புறங்களில் பாடசாலைகளுக்குச் சென்ற பிள்ளைகள் அநேகர் வழியில் திரும்பிச் சென்றுவிட்டனர். இதனுல் கிராமப்புறப் பாடசாலைகளில், ஆசிரியர்கள் மட்டுமே வந்து வரவுகளைப் பதிவு செய்துகொண்டனர்:

### யாழ், பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லாமல் முற்ருகப் பகிஷ்கரித்தனர். விஞ்ஞானபீட மாணவர்கள் மட்டும் நேற்று நடந்த பரீட்சையில் தோற்றினர்கள். பரீட்சைக்காக

(6-ம் பக்கம் பார்க்க)

# 30 வீதம் மாணவர் வருகைதந்தனராம்

## கல்வித் திணைக்களம் தகவல்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாவட்டத்தில் சராசரி 30 வீத மாணவர்களும் 95 வீத ஆசிரியர்களும் நேற்று பாடசாலைகளுக்கு வருகை தந்ததாக கல்விஇலாகா வட்டாரங்கள் தெரிவித்தன. அவ்வட்டாரங்கள் கீழ்க்காணும் விபரங்களைத் தெரிவித்தன.

| | | மொத்தம் | — | வரவு |
|---|---|---|---|---|
| பளை மகாவித்தியாலயம் | ... | 775 | — | 660 |
| கைதடி மகாவித்தியாலயம் | ... | 150 | — | 120 |
| சாவகச்சேரி இந்துக்கல்லூரி | ... | 2200 | — | 890 |
| (உயர்வகுப்பு மாணவர் வரவில்லை) | | | | |
| யாழ் சிங்கள ம. வி | ... | 470 | — | 358 |
| யாழ். ஒஸ்மானியா | ... | 480 | — | 320 |
| கரணவாய் வி, | ... | 1504 | — | 545 |
| யாக்கரை பாடசாலை | ... | 330 | — | 220 |
| வேம்படி மகளிர் | ... | 2200 | — | 360 |
| யாழ். இந்துக்கல்லூரி | ... | 1800 | — | 390 |
| யாழ், மத்திய கல்லூரி | ... | 1800 | — | 550 |
| யாழ். இந்துமகளிர் | ... | 1750 | — | 450 |




பாடசாலை மாணவ் மணிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
● உங்கள் அழகுக்கு மெருகூட்டி
● நாள் முழுதும் புத்துணர்ச்சியுடனும்
● நறுமணத்துடனும் திகழ வைக்கும்
கல்கி டால்க்கம்பவுடர்
உபயோகித்த வெற்று டின் ஒன்றைக் கொடுத்து உங்கள் கல்வித் தேவைக்கான
80 பக்க அப்பியாசக் கொப்பி ஒன்றை இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.
விநியோகஸ்தர்கள்:
கல்கிசன்ஸ்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7711

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையின் தலைவர்

## பேராசிரியர் சு. வித்தியானந்தன்

அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராக நியமிக்கப்பட்டதைப் பாராட்டுமுகமாக

## விருந்து வைபவம்

*1979-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு ''சுபாஸ் உல்லாசப் பிரயாணிகள் விடுதியில்'' நடைபெறும்.*

*பங்குபற்ற விரும்பும் மன்ற அங்கத்தவர்கள், அபிமானிகள் எம்முடன் தொடர்புகொண்டு பிரவேசச் சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.*

விருந்து ரூபா 20/-

யாழ்ப்பாணம்:- 229, மெயின் வீதி,
தொலைபேசி: 691

கொழும்பு:- 75, வாட்பிளேஸ்.
தொலைபேசி: 93678.

1511

HARCROS

## விவசாய இரசாயனப் பொருட்கள் விலை குறைப்பு

கௌரவ விவசாய அபிவிருத்தி, ஆராய்ச்சி அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க எமது விவசாய இரசாயனப் பொருட்களில் விலைக்குறைப்பு செய்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

விபரங்களுக்கு எமது இரசாயனப்பகுதி அல்லது உத்தரவுபெற்ற கையிருப்பாளர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**ஹரிசன்ஸ் & குரொஸ்பீல்ட் (கொழும்பு) லிமிட்.**


330, டார்லி வீதி - கொழும்பு-10.

(1514)

## மரண நன்றி நவிலலும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

அமரர் சுப்பிரமணியம் அருணாசலம்
(உரிமையாளர், மருதானை - பொறளை போசனசாலை)

தோற்றம்
18-7-1922



மறைவு
3-1-1979

அன்னாரின் மரணச் சடங்கிலும், நேற்றுமுன்தினம் கீரிமலையில் நடைபெற்ற அந்தியேட்டிக் கிரியையிலும் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் தேவையான ஒத்துழைப்புக்கள் தந்தோருக்கும் உளமார நன்றி நவில்வதுடன் இன்று எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியக் கிரியைகளிலும் கலந்து சிறப்பித்து அன்னாரின் ஆத்மா சிவானந்தப் பெரும் பேறெய்தப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— தாயார், மனைவி, மக்கள், மருமகன், சகோதரர்கள், மைத்துனர்கள், பேரப்பிள்ளைகள்.

''ராணி பவனம்''
ஊரைதீவு, புங்குடுதீவு-7. 1512

## விளம்பரம்

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## சிலை நிறுவுவதற்கான அறிவித்தல்

அமரர் திரு. எம். திருச்செல்வம் கியூ. ஸி. அவர்களது உருவச்சிலையொன்றை யாழ். முனீஸ்வரன் வீதி - காங்கேசன்துறை வீதிச் சந்தியின் வடமேற்கு மூலையில் நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த ஆலோசனையின் மீது அக்கறையுள்ள பொதுமக்களினதும் ஸ்தாபனங்களினதும் அபிப்பிராயங்கள் இவ்விளம்பரம் வெளிவந்த நாளிலிருந்து 30 நாட்கள் வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படுமென்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

க. சிவஞானம்,
ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
31-1-1979. 1508

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

மானிப்பாய் என்னுமிடத்தைச் சேர்ந்த கதிரிப்பிள்ளை கனகசுந்தரம் என்பவரின் மரணசாதனத்தின் விடயத்தில.

மரணமெய்தியவர்

வழக்கு இல: தத்துவம் 3419

எதிராக

கதிரிப்பிள்ளை கனகசுந்தரம் கைம்பெண் நகுலேஸ்வரி, மானிப்பாய்.

மனுதாரி

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் 1979-ம் ஆண்டு மாசி மாதம் 9-ந் திகதி நாளன்று முற்பகல் 9 மணிக்கு அந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1979-ம் ஆண்டு தை மாதம் 19-ந் திகதி.

இந்நீதிமன்றத்தின் கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

தயாரித்தவர்:
சி. இராசேந்திரன்,
மனுதாரின் தரணி.
1496

## இன்றைய போட்டி

[பலாலி]

வயாவிளான் ஞான வைரவர் சனசமூக நிலையம் நடாத்திவரும் சி. கந்தவனம் ஞாபகார்த்தக் கேடயத்திற்கான 1-ம் பிரிவு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதிப் போட்டிகள் இன்று நடைபெறுகின்றன. சாம்பியன் போட்டிகள் சனியன்று இடம்பெறும்

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கருகாமையில், பிரதான பாதைக்கருகில் 12 பரப்பு காணிவீட்டுடனும் வட்டுக்கோட்டை கிழக்கு தாவளையில் 10 பரப்பு மரங்களுடன் கூடிய வீட்டுக்காணியும் விற்பனைக்குண்டு. இரு நிலங்களுக்கும் ''ஜனனி'', 21, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் விலாசத்துடன் பெப்ரவரி5-ம்,6-ம் திகதிகளில் நேரடியாக தொடர்பு கொள்ளவும். தொலைபேசி: 7833, யாழ்ப்பாணம்.
1513

### பயிற்சி

வெல்டிங் (Electric Arc & Gas) இலெக்றிக் வயறிங், ரேடியோ (Transistor), Auto Electricians Certificate, Diploma in Building Technology முதலிய பயிற்சிகள், வெளிநாட்டு முறையில் நடாத்தப்படும். ஆங்கிலமும் முதலுதவிப் பயிற்சியும் இலவசம். National Institutes, 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். 1501

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

சாவகச்சேரி
மாவட்ட நீதிமன்றம்

கேரதீவு ரோட், நாவற்குழி என்னுமிடத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் பரராசா என்பவரின் மரணசாதனத்தின் சொத்தினதும் உடைமைப் பொருட்களினதும் விடயத்தில்

[மரணமெய்தியவர்]

வழக்கு இலக்கம்
தத்துவம்: 421

எதிராக

கேரதீவு ரோட், நாவற்குழி, சின்னத்தம்பி பொன்னம்பலம்.

[மனுதார்]

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே குறிக்கப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனப் எழுதப்படாத ஆதனங்கள் மற்றும் சொத்துக்கள் எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் 1979ம் ஆண்டு மாசி மாதம் 28ம் திகதி முற்பகல் 9 மணிக்கு அந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1978ம் ஆண்டு ஐப்பசி மாதம் 26ம் திகதி இந் நீதிமன்றத்தின் உத்தரவின்படி.

வி. சிவசுப்பிரமணியம்
பதிவாளர்

தயாரித்தவர்கள்:
பரராஜசிங்கமும்
அம்பிகைபாலனும்.
மனுதாரின் சட்டத்தரணிகள்.
1489

### விற்பனைக்கு

டாக்டர் பாவித்த நல்ல நிலையில் உள்ள 4 ஸ்ரீ வாக்ஸ் வகன் (Volkswagen) கார் விற்பனைக்குண்டு. டாக்டர் வெளிநாடு செல்வதால் உடன் தொடர்பு கொள்ளவும். 122 B, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 1503

வலி கிழக்கு தென் பகுதி பல நோக்கக் கூட்டுறவுச் சங்கம்

## வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திர அறிவித்தல்

ஷை சங்கத்தில் 16000 வெற்றுச்சாக்குகள் வரை கேள்விப் பத்திரமூலம் விற்பனைக்குண்டு. 12-2-79 திங்கட்கிழமை நண்பகல் 12 மணி வரை கேள்விப் பத்திர விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்களை 79-2-09-ந் திகதி வரை ஷை சங்கக் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி விண்ணப்பப் பத்திரம் ஒன்று ரூபா 1/-ம் வைப்புப் பணமாக ரூபா 250/-ம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக நிபந்தனைகளையும், விபரங்களையும் ஷை சங்க காரியாலயத்தில பெறுக்கொள்ளலாம். கேள்விப் பத்திர விண்ணப்பங்கள் யாவும் பொது முகாமையாளர், வலி-கிழக்கு தென் பகுதி பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இடதுபக்க மேல் மூலையில் வெற்றுச்சாக்குக்கான கேள்வி விண்ணப்பம் என்க் குறிப்பிடல் வேண்டும். இக்கேள்விப்பத்திரத்தினை நிராகரிப்பதற்கு சங்கத்திற்கு உரிமையுண்டு.

பொது முகாமையாளர்.
நீர்வேலி,
1979-01-31. 1509

## வடமராட்சி மீனவர் நலன் கருதி...

(புலோலி)

வடமராட்சிப்பகுதியிலுள்ள மீன்பிடியாளர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் வாங்குவதற்கு கடன்வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறைமீன்பிடித் திணைக்களம் இக்கடன் வழங்குவது சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் மீனவர்கள் மீன்பிடிவள்ளங்கள், வலைகள் போன்ற மீன்பிடி உபகரணங்களை 35 வீதக்கழிவுடன் கடன்கொள்வனவு முறையில் பெற்றுக்கொள்ள முடியுமென தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை எம்.பி. திரு. கே. துரைரத்தினம் மீனவர்கள் இக்கடனைப் பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்களைத் தட்டுப்பாடின்றிப்பெற்றுக்கொள்ளக்கூடிய ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார்.

[உ]

## திருமண அழைப்பு

**குகநாதன் - நல்லநாயகி**

எனது மகன் செல்வன் குகநாதனுக்கும் இணுவில் திரு. சி. இராசலிங்கம் தம்பதிகளின் புதல்வி நல்லநாயகிக்கும் இன்றுமாலை மணமகளில்லத்தில் நடைபெறும் திருமணவைபவத்திலும், 3, 4-2-79 சனி, ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிமுதல் எனது இல்லத்தில் நடைபெறும் உபசரணை வைபவங்களிலும் கலந்து சிறப்பித்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்

எஸ். ஆர். ஞானசுந்தரம்
(நாகசுரக்கலைஞர் — நிருபர், மாவிட்டபுரம்)
[1516]

## பாண்டிச்சேரி சம்பவம்

பாண்டிச்சேரி மாநிலத்தை அயல்மாநிலம் ஒன்றுடன் இணைக்கவேண்டுமென்ற யோசனை இருந்து வருவதாக இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்திருந்தபோது கூறிய ஒரு வார்த்தை பாண்டிச்சேரியில் பொறியாகப் பறந்து கொழுந்து விட்டெரியத் தொடங்கியிருக்கிறது.

இப்போது சுவாலை சிறிது தணிந்துள்ளபோதிலும் நிலைமை இன்னும் சீராக வில்லை.

பாண்டிச்சேரி இணைப்புப் பற்றித் தமது சொந்தக் கருத்தையே தாம் தெரிவித்ததாகவும் அப்படியான தீர்மானமெதுவும் மேற்கொள்ளவில்லையென்றும் பிரதமர் மொரார்ஜி தேசாய் பாண்டிச்சேரி பார்லிமெண்ட் உறுப்பினர் திரு பாலபழனூரிடம் தெரிவித்திருந்த போதிலும் உத்தியோகரீதியாகப் பிரதமர் தமது சொந்தக் கருத்துத்தான் என்று தெளிவுபடுத்தியதாகத் தெரியவில்லை. இதுவே இன்னமும் பாண்டிச்சேரியில் கொந்தளிப்பான நிலைநிலவுவதற்குக்காரணமென்று சொல்லலாம்.

மக்களின் உணர்ச்சியைக் கிளப்பிவிடும் மொழி, பிரதேசம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் பொறுப்பான பதவிகளில் இருப்பவர்கள் நிதானமாகச் சிந்தித்துக் கருத்து வெளியிட வேண்டியது எவ்வளவு அவசியமென்பதையே பாண்டிச்சேரி பற்றி மொரார்ஜிதேசாய் கூறிய வார்த்தைகள் எடுத்துக் காட்டுகிறது.

பிரதேசம், மொழி முதலிய வேறுபாடுகளைக் கடந்தநிலையில் மொரார்ஜி போன்ற பெருந்தலைவர்கள் இருக்கலாம்; சிந்திக்கலாம். ஆனால் சாதாரண மக்களும் அதேநிலையில் இருப்பார்கள் என்று நினைக்கமுடியாது.

பாண்டிச்சேரியில் இன்று தோன்றியுள்ள நிலைமைக்கு உடனடியாகத் தீர்வுகாணப் படவேண்டுமானால் ஒரே ஒரு வழிதானுண்டு. ராஷ்டிரபதி ஆட்சியின் கீழ் இந்திய யூனியன் பிரதேசமாக இருக்கும் பாண்டிச்சேரியில் அயல்மாநிலத்துடன் அதனை இணைக்க வேண்டுமா, வேண்டாமா என்பதை சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் தீர்வு காண்பதே அந்த வழியாகும்.

இதற்கு அகில இந்திய அண்ணாதிராவிடமுன்னேற்றக் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் யோசனை தெரிவித்திருப்பது போல் பாண்டிச்சேரியில் உடனடியாகப் பொதுத் தேர்தலை நடத்துவதேசிறந்த மார்க்கமாகும்.

---

உறக்கத்தில் இருப்பவனைக் கொலை செய்வதற்கு வீரம் தேவையில்லை. அதேபோல் நம்பிக்கை வைத்திருப்பவனை ஏமாற்றுவதற்கு சாமர்த்தியம் தேவையில்லை.

— யாரோ

---

★ லண்டன் ★ பிரான்ஸ் ★ ஜெர்மனி

# கூலிவேலை செய்து நம் மாணவர் மேற்படிப்பைத் தொடருகின்றனர்

## நேரில் கண்டதாக 'அமிர்' தகவல்

(கொக்குவில்)

"இரவு பகலாக கண் விழித்து ஊண் உறக்கமின்றிப் படித்தும் தமிழன் என்ற ஒரே காரணத்தால் தமக்கு பல்கலைக் கழக அனுமதி கிடைக்காத வேதனையால்தான் நமது தமிழ் வாலிபர்கள் பலர்வெளி நாடுகளுக்குச் சென்று கஷ்டப்பட்டு கூலிவேலை செய்து அதன் மூலம் கிடைக்கும் ஊதியத்தில் மேற்படிப்பைத் தொடங்குகின்றனர்"

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபருமான திரு ஏ. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

அவர் இணுவிலில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் மேற்கண்டவாறு சொன்னார்.

### வேதனை அடைந்தேன்

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது: 'எனது வெளிநாட்டு விஜயத்தின் போதுஇங்கிலாந்து,பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகளில் இதனை நான் நேரிலேயே கண்டும், அறிந்தும்வேதனையடைந்தேன்.

### ஆட்சிக்கு வருமுன் சொன்னது

"தரப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொட்டு தமிழ் மாணவர்கள், பல்கலைக் கழகப் பிரவேசத்தில் பின்தள்ளப்பட்டார்கள்.

தரப்படுத்தலை ஒழிப்போம் திறமைக்கு முதலிடம் அளிப்போம் என்று கூறி ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சியினர் 1978ல் தரப்படுத்தலை நீக்கினர். இதனால் அவ் ஆண்டு தமிழ் மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்கு கூடுதலாக தெரிவுசெய்யப்பட்டார்கள். இதனால் சிங்கள மக்கள் குறைவாக பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகினர் என்பதை புரிந்துகொண்ட அரசு மீண்டும் தரப்படுத்தலைக் கொண்டு வந்து தமிழ்மக்களைப் படுகுழியில் தள்ளப்பார்க்கிறது

இதை எமது இளைஞர்களும், நாமும் ஒன்றுகூடி தீவிரமாக எதிர்க்கவேண்டும்.

### தேர்வு முறை

30 வீதம் தகுதியடிப்படையிலும், 55 வீதம் மாவட்ட அடிப்படையிலும் 15 வீதம் பின்தங்கிய பிரதேசம் என்ற அடிப்படையில் பல்கலைக் கழக தேர்வுமுறை நடைபெறவிருக்கிறது

மாவட்டங்கள் இனரீதியாக ஆக்கப்பட்டுள்ளது. 26மாவட்டங்களில் 6 மாவட்டங்கள் தமிழருக்கும் 1 மாவட்டம் முஸ்லிம்களுக்கும், 19 மாவட்டங்கள் சிங்களவர்களுக்குமாகப் பிரிக்கப்பட்டுள்ளது அம்பாறை மாவட்டம் முஸ்லிம்களுக்குப்போக 6 மாவட்டங்கள் மட்டுமே தமிழர்களுக்கு உரியது.

### கல்வி வசதி

தமிழ் மக்கள் வாழும் 6 மாவட்டங்களில் யாழ். மாவட்டத்தில் மட்டுமே கல்விவசதிகள் உண்டு ஏனைய 5 மாவட்டங்களிலும் கல்வி கற்பதற்குப் போதிய வசதிகளில்லை. எந்த வகையில் பார்த்தாலும் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகும் தமிழ் மக்களின் எண்ணிக்கையைக் குறைத்து சிங்களவரின் எண்ணிக்கையைக் கூட்டவே அரசு முனைகிறது'' என்றார்.

இவ்வைபவத்தில் ஆங்கில ஆசிரியை திருமதி நாகராணி தலைவீரசிங்கத்தால் நெறிப்படுத்தப்பட்ட ஆங்கில நாட்டிய நாடகமும் நடைபெற்றது. (உ)

---

## தண்ணீர்ப் பந்தல் சபை

[மன்னார்]

திருக்கேதீஸ்வரம் மகாசிவராத்திரி தண்ணீர்பந்தல்சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் மன்னார் போக்குவரத்துச்சபை மண்டபத்தில் திரு. பி யூ. மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

புதிய நிர்வாகிகள் தெரிவில் திரு. ரி. உமாபதிசிவம் தலைவராக மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார். கூட்டுச் செயலாளர்களாக திருவாளர்கள்எஸ். சௌந்தரநாயகமும், எள். சண்முகநாதனும் கூட்டுப் பொருளாளர்களாக திருவாளர்கள் ரி. சுந்தரலிங்கமும் ஈ. எஸ். இராசையாவும் 11 பேர்களைக் கொண்ட நிர்வாகசபையும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டது.

கூட்டத்தில் கடந்த வருடத்தைவிட இம்முறை மிகச் சிறப்பான முறையில் தண்ணீர்ப்பந்தலை நடாத்துவதென்றும் இதற்கு சகலதொழிலாளர்களும் அதிகாரிகளும் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுவதுடன் கொழும்புவாழ் வர்த்தகம் செய்யும் தமிழ் பிரமுகர்களிடம் இதற்கென நிதிசேர்ப்பதென்றும் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. [உ]

---

# மக்கள் கருத்து

## தார்மிகம் பேசுவோர்

### தரப்படுத்தலை அனுமதிக்கலாமா?

கடந்த சில வருடங்களாக பல்கலைக்கழகப் பிரவேசத்தில் தரப்படுத்தல் முறை நடைமுறையில் இருந்து வருகின்றது. தரப்படுத்தல் முறை அமுலுக்கு வந்ததிலிருந்து இன்றுவரை, இதற்கு எதிராக தமிழ் மாணவர்கள் காலத்திற்குக் காலம் பாடசாலைபகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். கல்விமான்கள் அரசியல் வாதிகள் உட்பட பல பொதுநல இயக்கங்களும் கண்டனம் தெரிவித்தன. பாராளுமன்றத்தில் கூட எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களில் பலர் புள்ளி விபர அடிப்படையில் தரப்படுத்தலினால் தமிழ் மாணவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள் என்று குற்றம் சாட்டிப் பேசியிருக்கிறார்கள். ஆனாலும் இதுவதைத் தரப்படுத்தல் முறைக்கு விமோசனம் ஏற்படவில்லை.

கடந்தஆட்சியினர் கொண்டு வந்த தரப்படுத்தல் முறையை இன்றைய ஆட்சியினர் மீண்டும் அமுல் நடத்த இருப்பது வேதனைக்குரியது தார்மிக சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என நினைக்கும் ஆட்சியினர் தரப்படுத்தல் முறையை அறவே நீக்க வேண்டும்.

காலத்திற்குக் காலம் தரப்படுத்தலுக்கு புதிய அம்சங்கள் புகுத்தப்பட்டு இன்று திறமை அடிப்படை, விகிதாசார அடிப்படை, பின்தங்கிய பிரதேச அடிப்படை என மெருகு ஊட்டப்பட்டுள்ளது. இதனால் பெருமளவு தமிழ் மாணவர்கள் பாதிக்கப்படுவார்களென எதிர்பார்க்கப் படுகின்றது. திறமையான மாணவர்கள் எவரும் பல்கலைக்கழகப் பிரவேசத்தில் எவ்வகையிலும் பாதிக்கக்கூடாதென்பதே நீதியான கருத்து. ஆனாலும் பின்தங்கிய பிரதேச மாணவர்கள் முன்னேறிய மாணவர்களுடன் போட்டியிட்டு பல்கலைக்கழகம் செல்வது மிகவும் சிரமம்தான். பின்தங்கிய பிரதேசத்து மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்ல வேண்டியதும் முக்கியம் தான்

ஆனால் பின்தங்கிய பிரதேசம் தொடர்ந்தும் பின்தங்கிய பிரதேசமாக இருக்க வேண்டுமா என்பதை நாம் அலசி ஆராயவேண்டும். பின்தங்கிய பிரதேசத்தை முன்னேறவைப்பது அரசின்கடமையாகும். அரசு விரும்பி செயற்றிட்டங்களை திட்டினால் பின்தங்கிய பிரதேசமும் சில வருடங்களில் முன்னேறிய பிரதேசமாகக்கணிக்கக் கூடியதாக இருக்கும். பின்தங்கிய பிரதேச மாணவர்களுக்கு பல்கலைக்கழகப் பிரவேசத்தில் சலுகை வழங்கப்படுகின்றபோது திறமையான மாணவர் எவரும் பாதிக்கப்படாமலிருத்தல் வேண்டும்.

பல்கலைக்கழக அனுமதியில் விகிதாசார அடிப்படை முறையை நீக்குவதோடு, ஏனைய சில அயல்நாடுகளில் உள்ளமாதிரி திறமை அடிப்படையில், திறமையான சகல மாணவர்களையும் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதித்து, பின்தங்கிய பிரதேசத்து மாணவர்களை மேலதிகமாகச் சேர்த்துக்கொள்வதே மிகவும் சிறந்ததாக இருக்கும்.

த. சிவஞானரஞ்சன்.
யாழ்ப்பாணம்.

## அச்சுவேலி வைத்தியசாலை குறைபாடுகள்

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையின் அவல நிலை சொல்லுந் தரமன்று. மாவட்ட வைத்தியசாலை, ஆதார வைத்தியசாலைகளை 10 மைல் தொலைவில் கொண்டுள்ள அச்சுவேலியின் சனத்தொகை 4000-க்கு அதிகமாகும் அதிஷ்டவசமாக அரசினர் வைத்தியசாலை கட்டிடங்களில்வெடிப்புகளின்றி 39 வருடங்களாக இயங்கி வருகின்றது. சமீப வருடங்களில் குழாய்நீர் விநியோகமும், மின்விநியோகமும், அரைகுறையாக நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன. வைத்திய பொறுப்பதிகாரியின் இருப்பிட வசதிக்குறைவால் நடுசாம வேளைகளில் நீண்ட தாமதத்தின் பின்னரே வைத்திய உதவி பெறக்கூடியதாகவுள்ளது. வருடந்தோறும் திருத்த வேலைகளைச் சுட்டிக்காட்டியும் இவ்வசதியீனங்கள் தீர்க்கப்படவில்லை. மருந்து எடுக்க வெளிநோயாளர்கள் சென்றால் இருப்பதற்குக்கூட போதிய இடமோ, தளபாடமோ, இன்றி மரநிழலில் நிற்கவேண்டும். கைக் குழந்தையுடன் வருபவர்கள், முதியோர், இம்மரநிழலை தஞ்சமடைந்து வைத்திய வசதி பெறுகிறார்கள். மழைகாலத்திலோ இருபக்க விறாந்தையும் தூவானத்தினால் நிறைந்துவிடும். உள்நோயாளர்கள் குளிரினால் நடுங்குவார்கள். வாட்டிற்குள் தூவானம் செல்லாது தடுக்கக் கூடியதாக யன்னலோ, தட்டாப்பாய்களோ இல்லை.

பிரசவ அறை மிகவும் சிறியதாகவும் வசதியீனங்கள் கொண்டதாகவும் உள்ளது! சுகாதார துறையினரின் ஆதிக்கத்தில் உள்ள காணியைச்

(4ம் பக்கம் பார்க்க)

---

## நாடு நடப்பு

இலங்கையின் ஜனத்தொகையைவிட சிகரட் அதிகமாக விற்பனையாகிறது. குழந்தைகள் சிறுவர் அதாவது சிகரட் புகைக்காத சிறுவர்களும் பெண்களுமாகச் சேர்ந்து இலங்கையின் ஜனத்தொகை சுமார் ஒருகோடியே முப்பது லட்சம்தான். ஆனால் நமது நாட்டில் ஒரு நாளைக்கு அழியும் அதாவது புகையாகப் போகும் சிகரட்டுகளின் தொகை சுமார் ஒருகோடியே ஐம்பது லட்சமாகும். தலைநகரான கொழும்பில் மட்டும் நாளொன்றுக்கு ஐம்பது லட்சம் சிகரட்புகையாகிறது தலைநகரில்தான் அலுவலகங்களும் ஆலைகளும் இருக்கின்றன. ஆலைகளிலிருந்து வெளியாகும் புகையைவிட அலுவலகங்களிலிருந்து வெளியாகும் சிகரட் புகையின் அளவுப்பிரமாணம் அதிகம் என்று சொல்லலாமா!

0 0 0

இந்தியாவுக்கு ஸ்தல யாத்திரை செய்வதற்கு விவசாயிகள் குடும்பங்களுக்கு வங்கிக் கடன் வழங்குவதற்கான திட்டமொன்று வகுக்கப்பட்டிருப்பதாக இலங்கை வங்கித் தலைவர் திரு. நிசங்கா விஜயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

இலங்கை வங்கியில் கடன் பெற்றுக் கொண்டு விவசாயிகள் தங்கள் குடும்பங்களுடன் இந்தியாவுக்கும் நேபாளத்துக்கும் யாத்திரைசெய்யமுடியும் என்று திரு. நிசங்கா விஜயவர்த்தனா கூறினார்.

வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்களுக்கும் சேமிப்புக் கணக்கு வைத்திருப்பவர்களுக்கும் முதன்மை அளிக்கப்படுமாம். ஒவ்வொருவரின் வருமானத்தைப் பொறுத்து கடனை அறவிடும் தொகையைப்பற்றித் தீர்மானிக்கப்படுமாம்.

இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் தூதரக முதலாவது செயலாளர் திரு. பாரி இங்கிலன்ட் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து பல இடங்களுக்கும் சென்று பார்வையிட்டதுடன் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் உட்படப் பல பிரமுகர்களையும் சந்தித்து இங்குள்ள நிலைமைகள் பற்றி ஆராய்ந்து அறிந்துகொண்டார்.

'ஈழநாடு' அலுவலகத்துக்கும் வருகை தந்து கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தொழிற்சங்கப் பிரமுகர்கள் சிலரையும் சந்தித்து தொழில் வாய்ப்பு மற்றும் பலதரப்பட்ட பிரச்னைகள் குறித்தும் ஆராய்ந்தார். குருநகருக்குச் சென்று மீனவர்களையும் உரும்பராயில் விவசாயிகளையும் சந்தித்தார். தோலகட்டிக்கும் அவர் சென்றார்.

வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகள் இப்போது யாழ்ப்பாணத்துக்கு அடிக்கடி நேரில் வந்து நிலைமையை ஆராய்ந்து செல்வது தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு விரைவில் ஒரு நியாயமான தீர்வுகிடைப்பதற்கான அறிகுறியாகக் கருதலாமாவென்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

-- ஊர்சுற்றி

# உலகின் இன்றைய கொந்தளிப்புக்கு சோவியத்யூனியனே காரணம்

## அமெரிக்காவில் சீன உதவிப் பிரதமர் குற்றச்சாட்டு

வாஷிங்டன், பெப். 1
சோவியத்யூனியனால் உலகில் ஏற்படும் யுத்த ஆபத்தைத் தடுக்க அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பான், சீனு, 3ம் உலக நாடுகள் ஆகியன ஒன்றுசேர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

இவ்வாறு சீன உதவிப் பிரதமர் திரு. டெங்சியாவோ பெங் வாஷிங்டனில் தெரிவித்தார்

தமது அமெரிக்க விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்புவதற்கு முன்னர் திரு பெங் நேற்றிரவு டெலிவிஷனுக்கு அளித்த விசேட பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

உலகில் இன்று ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு நிலைக்கு சோவியத்யூனியனே காரணமாகும் இவ்வேளையில் சோவியத்யூனியன் உலகமக்களின் எதிர்ப்பைத் துச்சமாகமதித்து புறக்கணித்துவிட இயலாது. எனவே உலக நாடுகள் சோவியத்யூனியனுக்கு எதிராகக் குரல் எழுப்பவேண்டும்.

### ஆயுதக் கட்டுப்பாடு பேச்சுவார்த்தை

ஆயுதக்கட்டுப்பாடு குறித்த அமெரிக்க ரஷ்ய பேச்சுவார்த்தைகளுக்கு சீனு என்றுமே எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டாது.

### பொல்பொட் அரசுக்கு ஆதரவு

கம்போடியாவின் புதிய அரசுக்கு சீனு ஒருபோதும் ஆதரவு அளிக்கமாட்டாது அதேவேளை பிரதமர் திரு. பொல்பொட்டின் அரசுக்கு ஆதரவு அளிக்க சீனு என்றுமே தயாராக உள்ளது. பொல்பொட் அரசுக்கு எவ்வாறுன உதவியை அளிப்பது என்பது குறித்து சீனு இப்போது ஆராயப்பட்டு வருகின்றது என்றும் திரு. பெங் தெரிவித்தா. (இ)

---

புதுச்சேரியில்

## 243 பேருக்கு விடுதலை

புதுச்சேரி, பெப். 1
புதுச்சேரியில் கடந்தவாரம் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்கள் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட 243 பேரும் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்களுள் பாண்டிச்சேரியின் முன்னுள் முதல்வர் ஜனுப் பாருக் மஜரக்காயரும், முன்னுள் உள்துறை அமைச்சரும் அடங்குவர். (இ)

---

## ஈரானில் அமைதி காக்க பிரதமர் வேண்டுகோள்

தெஹ்ரான், பெப். 1
"ஒரு நாட்டில் ஏற்படும் எவ்வித புரட்சியும் அந்நாட்டின் சர்வாதிகாரத்துக்கு வழிவகுக்கும்"

இவ்வாறு ஈரான் பிரதமர் டாக்டர் பக்தியார் நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள வானொலிச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மக்கள் அமைதியுடன் இருந்து அரசுடன் ஒத்துழைக்குமாறும் தேசஒற்றுமையைப் பாதுகாக்க அரசுக்கு ஆதரவு வழங்குமாறும் அவர் தமது உரையில் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டார்.

ஈரானின் ஆபத்து நிலை தொடர்ந்து இருப்பதை ஜனநாயகத்தை விரும்பும் சுதந்திர உணர்வுடைய மக்கள் ஆதரிக்கமாட்டார்கள் என்று தாம் நம்புவதாகவும் டாக்டர் பக்தியார் தமது உரையில் தெரிவித்துள்ளார்.

ஈரானிய சமயத் தலைவர் அயத்தொல்லா கொமேனி இன்று நாடு திரும்புவதை அடுத்தே பிரதமர் பக்தியார் மேற்கண்ட வானொலி உரையை நிகழ்த்தினுர் என்று கூறப்பட்டபோதிலும் டாக்டர் பக்தியார் தமது உரையில் சமயத்தலைவரின் பெயரை எச்சமயத்திலும் கூறவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

---

## ஈரானில் ஆர்ப்பாட்ட தடை நீக்கம்!

தெஹ்ரான், பெப் 1
ஈரானில் ஆர்ப்பாட்டங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடைஉத்தரவு நீக்கப்பட்டுள்ளது.

சமயத்தலைவர் அயத்தொல்லா கொமேனி நாடு திரும்புவதை அடுத்தே இத்தடை உத்தரவு ரத்துச்செய்யப்பட்டுள்ளது

ஆர்ப்பாட்டங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடைஉத்தரவு மூன்று நாட்களுக்குத் தளர்த்தப்பட்டிருக்கும் என்று அரசு அறிவித்துள்ளது.

இதேவேளையில் இன்றுவரும் அயத்தொல்லா கொமேனியை வரவேற்க தெஹ்ரான் விமான நிலையத்திலும் வீதிகளிலும் லட்சக்கணக்கான மக்கள் காத்திருக்கிருர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

---

பருத்தித்துறையில்

## சிகிச்சைப் பிரிவு இன்றி கர்ப்பிணிகள் அவதி

[புலோலி]
பருத்தித்துறைப் பகுதியில் கடந்த சிலவாரங்களாக கர்ப்பிணிகளுக்கான 'கிளினிக்' நடைபெருததால் தாய்மார் பெரிதும் கஷ்டமடைந்து வருகின்றனர் இப்பகுதிக் கர்ப்பிணிகளின் நன்மை கருதிப் பருத்தித்துறை கிராமசேவை அலுவலரின் அலுவலகத்தில் பருத்தித்துறை சுகாதாரவைத்திய அதிகாரியினுல் இக்கிளினிக் நடத்தப்பட்டுவந்தது

பிரதி புதன் கிழமைகள் தோறும் இக்கிளினிக்கை நடத்திவந்த சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம் வேலும்மயிலும் பதுளைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றதைத் தொடர்ந்தே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

புதிய சுகாதார வைத்திய அதிகாரி இன்னும் நியமிக்கப்படாததால் கர்ப்பிணிகள் பெரிதும் சிரமமடைந்துள்ளதுடன் ஏமாற்றத்துடன் வீடு திரும்பவேண்டியுள்ளது. (உ)

---

சூருவளியினுல்

## பாதிக்கப்பட்ட பகுதிகளில் இலவச கல்விச்சேவை

### ஈழமாணவர் மன்றம் ஏற்பாடு

[மட்டக்களப்பு]
சூருவளியினுல் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண க. பொ. த. [உயர்தரம்] 1979 தமிழ்மாணவர்களுக்கான இலவச கல்விச்சேவை, அடுத்த மாதம் பூராகவும் மட்டக்களப்பு, கல்முனை, வந்தாறுமூலையில் நடாத்துவதற்கு ஈழமாணவர் மன்றம் ஏற்பாடுகளைசெய்துவருகிறது.

வகுப்புக்கள் யாழ் பல்கலைக்கழக மாணவர்களாலும், வெளிக் கல்விநிலைய பட்டதாரிகளாலும் நடாத்தப்படும் போதனைக்காலத்தில் மாணவர்களுக்கு அச்சிடப்பட்ட சுருக்கக்குறிப்புகளும் இலவசமாக வழங்கப்படும்

இதுவரை பயிற்சிநெறியில் போதனை பெறுவதற்கு, பிரயோக கணிதத்திற்கு 238 மாணவரும்; தூயகணிதத்திற்கு 266 மாணவரும், இரசாயனத்திற்கு 53 மாணவர்களும், பௌதிகவியலுக்கு 532 மாணவர்களும், தாவரவியலுக்கு 64மாணவர்களும், பொருளியலுக்கு 236 மாணவர்களும், புவியியலுக்கு 139 மாணவர்களும், கணக்கியலுக்கு 176 மாணவரும். வர்த்தகம் நிதியும் 199 மாணவரும் ஆட்சியியலுகு161 மாணவகும் தமிழ்195 மாணவரும், வெளிக்களமாணவர்களாக 706மாணவர்களும் விண்ணப்பம் செய்துள்ளனர் என்று மேற்படி மன்றத்தினர்தெரிவித்துள்ளனர்.

இதுவரை தொடர்பு கொள்ளத் தவறியவர்கள் செயலாளர் ஈழ மாணவர் மன்றம், இந்து இளைஞர் மன்றம மட்டக்களப்பு என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளும்படி கோரியுள்ளனர். [கெ]

---

## அச்சுவேலி...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றி மதிலோ, வேலியோ, இல்லாததினுல் வெளியார் சென்று மலம் கழிப்பதன் மூலம் உண்டாகும் துர்நாற்றம் வர்ணிக்க முடியாது. இப்படியாக பலகுறைகளும் நீங்குவதற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தின் மூலம் லட்சரூபா ஒதுக்கப்பட்டதென பேசிக்கொள்ளப்பட்டாலும், அப்பணம் புஸ்வாணம் ஆகிவிடுமோ என்று பேசிக் கொள்ளப்படுகிறது.

மேற்காட்டிய அத்தியாவசிய தேவைகள் விரைவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்பதில் ஒத்த கருத்துக் கொண்டவர்கள், வைத்திய அதிபரின் தலைமையில் கூடி ஊக்கமும், ஆக்கமும் அளிக்க வேண்டுமென்பதே ஒவ்வொருவரினதும் பேரவாவாகவுள்ளது. நடக்குமா?

செல்வி
பி. செந்தில்நாயகம்
யாழ்ப்பாணம்.

## சிமெந்தில் அதிகலாபம்

வடமாகாணத்தில் உள்ள சகல கூட்டுறவுச் சங்கங்களிலும் சிமெந்து 20ரூபா 50 சதத்திற்கு விற்பனை செய்யப்பட்டு வருகையில் நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தில் மாத்திரம் 22 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது இந்த விலை உயர்வால் தனியார் விற்பனை நிலையங்களில் சிமெந்தின் விலை மேலும் உயர்ந்துள்ளது

உண்மையில் சிமெந்தின் நியாய விலை 18 ரூபாய் 50 சதமாகும் இன்றைய விலைவாசி உயர்வால் தவிக்கும் மக்களுக்கு கூட்டுறவுச் சங்கங்களின் கட்டுப்பாடற்ற தன்னிச்சையான போக்கு மேலும் நெருக்கடியைக் கொடுப்பதாகவுள்ளது ஆகவே இதற்கு உரியவர்கள் உடன் நடவடிக்கை எடுத்து நிவாரணம் காணுமாறு வேண்டுகின்ரேம்..

வ.ந.ஜெயபாலன்
ந.இரத்தினசிங்கம்
பொற்பதிவீதி
கொக்குவில்.

---

## எம். பி யிடம் குறைபாடு உரைப்பர்

(நெல்லியடி)
பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினத்தை அல்வாய் பாரதிதாசன் சனசமூக நிலைய இளைஞர்கள் மிகவிரைவில் சந்தித்து தமது குறைபாடுகளை எடுத்துக் கூறியுள்ளனர்.

அல்வாய் கிராமத்திலுள்ள வீதிகளின் நிலைமை படுமோசமாக இருப்பதும் கல்வியில் பின்தங்கியுள்ளதுடன் பாடசாலை வசதிகள் போதாமை உத்தியோகம் வழங்குவதில் அல்வாய் கிராமத்து இளைஞர்கள் புறக்கணிக்கப்பட்டமை என்பன இச்சந்திப்பின்போது சுட்டிக் காட்டப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை எம். பியும் அக்கிராமத்து இளைஞர்களைச் சந்திக்க விரும்புவதாக கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்

---

## கரவெட்டிப் பாடசாலைகளுக்கு நிதிஒதுக்கீடு

(நெல்லியடி)
கரவெட்டிப் பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து சுமார் 1 லட்சத்து 25-000 ரூபா உடுப்பிட்டி எம். பி. திரு த. இராசலிங்கத்தின் சிபார்சின் பேரில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந் நிதியில் கரவெட்டி திருஇருதயக் கல்லூரிக்கு 40-000 ரூபாவும், ஞானசாரியார் கல்லூரிக்கு 40-000 ரூபாவும்,கட்டைவேலி யார்க்கரு வித்தியாசாலைக்கு 15-000 ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உடுப்பிட்டித் தொகுதிக் கல்லூரிகளின் கல்விச் செலவிற்கு சுமார் 5 லட்சத்து 50 ஆயிரத்தி 500 ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது (உ)

---

## "பனைவளம் இருக்கையில் தொழிலின்றி இருப்பதா?"

### உதவி அரசாங்க அதிபர் கேட்கிருர்

[அரியாலை]
"பனைவளம் பெருகிக் காணப்படும் இப்பகுதியில் மக்கள் தொழிலில்லாமல் வாழ்வது மிகவும்கவலைக்குரியதாகும் கற்பகதருவாக விளங்கும் பனையின்மூலப்பொருட்களைப்பயன்படுத்தி மக்கள் தொழில்பெறக் கூடியதாக பனம்பொருள் அபிவிருத்திச்சபையின் மூலம் ஒரு தொழிற்சாலையை இப்பகுதியில் அமைத்து இப்பகுதி மக்களுக்கு வேலை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்".

இவ்வாறு வேலணை நேதாஜி சனசமூகநிலைய முன்றலில் நடைபெற்ற விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வேலணை உதவி அரசாங்கஅதிபர் திரு. மு. தம்பிமுத்து பேசுகையில் குறிப்பிட்டார்.

கிராமத்தின் தேவைகள் குறித்த மகஜர் ஒன்று சனசமூக நிலையத்தின் சார்பில் உதவி அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

இவ்விழாவில் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு ஆ. செந்தில்வடிவேல், வலிகிழக்கு சனசமூகநிலையங்களின் சமாசத்தலைவி திருமதி வேதவல்லி கந்தையா. வேலணை மாதர் முன்னேற்றச்சங்கத் தலைவி திருமதி பத்மாவதி திருஞானசெல்வம். அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபைப் பொதுச் செயலாளர் திரு. எஸ். பி ஜீவானந்தம் ஆகியோர் பேசினர்.

அரியாலையூர் அண்ணுவியார் சின்னையாவுக்குவேலணை உதவி அரசாங்க அதிபர் திரு மு தம்பிமுத்து மாலை அணிவித்துக் கௌரவித்தார நிலையம் சார்பில் பாராட்டுப்பத்திரம் வாசித்து வழங்கப்பட்டது. வேலணையூர் நடிகமணி ந. தங்கவடிவேலுக்கு நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபா திரு. ஆ செந்தில்வடிவேல் மாலை அணிவித்துக் கௌரவித்து நிலையம் சார்பில் பாராட்டுப்பத்திரம் வழங்கப்பட்டது. [உ]

---

## பதவியுயர்வு

(நெல்லியடி)
இலங்கை மத்திய போக்குவரத்துச்சபையின் வடபிராந்திய டிப்போக்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மிக விரைவில் பதவியுயர்வுகள் வழங்கப்படவுள்ளன.

ஏற்கனவே கோரப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பான நேர்முகப் பரீட்சைகள் தற்சமயம் யாழ்ப்பாணத்திலுள்ள வடபிராந்திய தலைமையகத்தில் நடைபெற்று வருகின்றன தொழில்தேர்ச்சி சம்பந்தமான பரீட்சைகள் கோண்டாவில் இ. போ. ச. டிப்போவில் நடைபெற்று வருகின்றன.

கடந்த வாரம் மின்னியலாளர் மின்கல இணைப்பாளர் ரயர் பொருத்துநர் உபசரணைசாலையாளர் ஆகியோருக்குரிய பரீட்சைகள் நடைபெற்றன. தொடர்ந்தும் பொறியியல்பகுதி மெக்கானிக் தரம் ஒன்று தரம் இரண்டுக்கான பரீட்சைகளும் நிர்வாகப்பகுதி ஊழியர்களுக்கான பரீட்சைகளும் பண்டகசாலை ஊழியருக்குமான பரீட்சைகளும் நடைபெறும் எனத் தெரிய வருகின்றது [உ]

## பதினைந்து வருட அஞ்ஞாத வாசத்தின்பின்

# கொமெய்னி நாடு திரும்பினர்!

### மகிழ்ச்சி ஆரவாரத்துடன் மக்கள் வரவேற்றனர்

தெஹ்ரான், பெப். 1

இஸ்லாமியக் குடியரசு ஒன்றை நிறுவுவதென்றதமது உறுதியுடன் ஈரானியமுஸ்லிம் தலைவரும், மன்னர் ஷாவின் எதிர்ப்பாளர்களில் முக்கியமானவருமான ஆயத்தொல்லா கொமெய்னி இன்று காலை பிரெஞ்சு வாடகை விமானம் மூலம் தெஹ்ரான் திரும்பினர்.

15 ஆண்டுகளாக வெளிநாடுகளில் இருந்து வந்த கொமெய்னியுடன் அவரது ஆலோசகர்களும், 150 பத்திரிகை நிருபர்களும் விமானத்தில் வந்தனர்.

கொமெய்னி வந்தடைந்த வேளை இராணுவஹெலிகொப்டர்கள் விமான நிலையத்திற்கு மேலாகப் பறந்தவண்ணமிருந்தன.

லட்சக்கணக்கான மக்கள் கொமெய்னியை மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்றனர்

விமான நிலையத்திலோ, கொமெய்னி சென்ற பாதைகளிலோ இராணுவ வீரர்கள் நிறுத்தப்படவில்லை. ஈரானில் ஆயுதக்கிளர்ச்சியொன்று முழு அளவில் உண்டாகுமென அறிக்கைகள் தெரிவிக்கின்றன. [உ]

## இலவச புத்தகம்

(புலோலி)

பருத்தித்துறை இந்து இளைஞர் சங்கத்தினர் பருத்தித்துறை, உடுப்பிட்டித் தொகுதிகளில் வாழும் இந்துஏழை மாணவர்களுக்கு சமயபாடப் புத்தகங்களை இலவசமாக வழங்கவுள்ளனர்.

இந்து ஏழைமாணவர்களுக்கு இலவசமாகச் சமயபாடப் புத்தகங்கள் வழங்குவதற்குரிய நடவடிக்கைகளைப் பருத்தித்துறை இந்து இளைஞர் சங்கத் தலைவர் மேற்கொண்டுள்ளார்

## இன்றைய இராசிப்பலன்

தை மாதம் 20-ந் திகதி

வெள்ளிக்கிழமை

(2-2-79)

**மேடம்:-** தொழில்துறையில் மதிப்புக்கிடைக்கும்வாழ்க்கையில் உற்சாகம் பெருகும். அரசபோகமும் கிடைக்கும். மனநிறைவுக்கும் இடமுண்டு.

**இடபம்:-** மனக்கவலைக்கு இடமளிக்கும். சுறுசுறுப்புக் குன்றும். கொள்கையில் கோணலுடன் கோபமும் உண்டாகும். அமைதி நன்று.

**மிதுனம்:** கல்வித்துறையில் முன்னேற்றம் ஏற்படும் அறிஞர்களின் ஆதரவு கிடைக்கும். மாதுருவழிப் பெருமைக்கும் இடமுண்டு.

**கடகம்:-** சுபகாரியம் ஒன்றுக்கு வழிகோலப்படலாம். வசதிகள் பெருகும். வாழ்க்கையும் வளமாகும். புத்திரவழியாலும் நன்மையுண்டு.

**சிங்கம்:-** ஆயுதபிடைக்கு இடமுண்டு. எதிலும் அவதானம் வேண்டும். அவசரப் போக்கு அனர்த்தங்களுக்கு இடமளிக்கும். தெய்வநம்பிக்கை நன்று.

**கன்னி-:** களஸ்திரவழியால் மகிழ்ச்சிகரமான சம்பவம் இடம் பெறும். உள்ளத்தில் உவகைதுள்ளும். தொழில் புரிவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்:-** வணிகர்கள் வாழ்க்கை சோதனை நிறைந்ததாகவிருக்கும். சிறிய தலையிடிக்கும் இடமுண்டு நிதானத்துடன் நடந்துகொள்ளவும்.

**விருச்சிகம்:-** புண்ணிய காரியங்களில் உற்சாகம் பிறக்கும். கவர்ச்சிகரமான தினம் பிள்ளைகளினல் பெருமைக்கிடமுண்டு இல்லத்திலும் இனியவை நடக்கும்.

**தனுசு:-** புதிய எண்ணங்கள் மலரும் தொழில்துறையில் முன்னேற்றமுண்டு. சிலருக்கு இருப்பிடமாற்றம் கிடைக்கும். பொதுசனத்தலைமையும் கிடைக்கும்.

**மகரம்:-** பொருள்துறையில் திருப்திகரமான சூழ்நிலை தென்படும். பொருள் வரவிலும் மகிழ்ச்சி தென்படும். பெரியோர் ஆதரவும் பெருகும்.

**கும்பம்:-** வாய்வுக் கோளாறு உடல் நலத்தைப் பாதிக்கலாம். உடல்நலத்தைப்பாதிக்கலாம். உணவு விடயத்தில் சுகாதாரம்வேண்டும் வியாபாரிகள் நஷ்டமடைவர். புதிய முதலீட்டைத் தவிர்க்கவும்.

**மீனம்:-** குடும்பத்தில் தொல்லைகள் உருவாகும். சிறிய விஷயத்திற்கும் இடமுண்டு. கடமையிலும் தடைகள் தோன்றும்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## காதல் மணத்தின்பின்

# கத்திக்குத்து

### கணவர் தலைமறைவு

[யாழ்ப்பாணம்]

குடும்பத்தகராறு காரணமாகத் தமது கணவரால் கத்தியால் குத்தப்பட்டாகக்கூறப்படும் இளம்பெண் ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இப் பெண்ணின் முகம், நெஞ்சு, வயிறு ஆகிய இடங்களில் கத்திக்குத்துக்காயங்கள் ஏற்பட்டுள்ளன.

உரும்பராய் தெற்கில் இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது தவரூபி (21 வயது) என்ற இப் பெண் கத்தியால் குத்தப்பட்டது சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் அவரது கணவரான தர்மலிங்கம் என்பவர் பொலிசாரால் தேடப்பட்டு வருகிறார்.

காதலித்தே இவர்கள்மணம் புரிந்து கொண்டனராம்.

சுன்னுகம் பொலிசார் தொடர்ந்து விசாரணைநடத்துகின்றனர்.

சந்தேகநபர் தலைமறைவாகி விட்டாராம். [கை-உ]

## காரைநகர், அச்சுவேலியில் புதிய பொலிஸ் நிலையங்கள்

[வண்ணார்பண்ணை]

வடபகுதியில் மேலும் இரு பொலிஸ்நிலையங்களை நிறுவ யாழ். பொலிஸ் அதிபர் நடவடிக்கை எடுத்து வருகிறார். அச்சுவேலியிலும், காரைநகரிலும் இந்தப்பொலிஸ்நிலையங்கள் நிறுவப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்த நிலையங்களைத திறப்பதற்கு வசதியானகட்டிடங்கள் கிடைத்தவுடன்இவைதிறக்கப் படுமென்று பொலிஸ் அதிபர் தெரிவித்துள்ளார். அச்சுவேலி காரைநகர் பகுதிகளை உள்ளடக்கிய பகுதிகளுக்கு இந்த நிலையங்கள் சேவைசெய்யும் என்றும், இதற்குப் பொருத்தமான இடங்களைப் பெற்றுத் தருமாறும் பொலிஸ் அதிபர் இப்பகுதி உதவி அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளார். [உ]

## பெண் டாக்டரின் சேலை, தங்கவளையல் திருட்டு

### யாழ். ஆஸ்பத்திரி விடுதியில் நடந்ததாகப் புகார்

[கொக்குவில்]

பெண்டாக்டர் ஒருவரின் விலையுயர்ந்த சேலையொன்றும் ஒருஜோடி தங்கவளையல்களும் திருட்டுப்போய்விட்டனவாம்.

பெண் டாக்டர்கள் தங்கும் விடுதியில் இத்திருட்டு நடைபெற்றுள்ளதாகயாழ்ப்பாணம் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

திருமண வீடொன்றிற்குச் செல்வதற்காக இப்பெண் டாக்டர் மேற்படி பொருட்களை அலுமாரியில் வைத்திருந்தாராம்.

பொலிசார் புலன்விசாரணை நடத்திவருகின்றனர். [உ]

## 6வது கிரிக்கட் டெஸ்ட் இன்று

கான்பூர், பெப் 1

இந்திய-மேற்கிந்திய கிரிக்கெட் டெஸ்ட் தொடரின் 6வது இறுதி டெஸ்ட் நாளை வெள்ளிக்கிழமை கான்பூரில் ஆரம்பமாகின்றது

இந்தியக் கோஷ்டியில் நரசிம்மராவுக்குப் பதிலாக மொகிந்தா அமர்நாத் சேர்க்கப்பட்டுள்ளார்.

நடந்துமுடிந்த 5 டெஸ்ட்டில் 4 டெஸ்ட்கள் வெற்றி தோல்வியின்றிமுடிந்தன 4வது சென்னை டெஸ்டில் இந்தியக் கோஷ்டி 3 விக்கட்டுகளால் வெற்றிபெற்றது தெரிந்ததே [இ]

## பயிற்சி

[யாழ்ப்பாணம்]

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு வலைப்பந்தாட்ட பயிற்சி வகுப்பு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்றது

கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்ற இவ்வகுப்பின்போது கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு வி. சொக்கலிங்கம் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்டார்.

விளையாட்டு உத்தியோகத்தர் திரு எஸ். மரியதாஸ் ஒழுங்குசெய்த இவ்வகுப்புக்களில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, அத்தியார் இந்துக் கல்லூரி, அச்சுவேலி மகா வித்தியாலயம், அச்சுவேலி புனித திரேசா கல்லூரி, கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலை ஆகியவற்றின் மாணவிகள் கலந்துகொண்டனர். விளையாட்டு உத்தியோகத்தர்கள் செல்விகள் எஸ் வைத்திலிங்கம், எம். இரத்தினசிங்கம் ஆகியோர் மாணவிகளுக்குப் பயிற்சி அளித்தனர்.

நாகம்ஸ்
(சுன்னுகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
பத்மினி - ராதா
சித்தி

Rio (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
ONE CHANCE IN A THOUSAND
(War Film - color-Scope)

தினசரி 4 காட்சிகள் கடைசிவாரம்
ராணி (யாழ் நகர்) எம் ஜி ஆர். - அஞ்சலிதேவி நடித்த
சக்கரவர்த்தித் திருமகள்
(புதிய பிரதி)

மனோகரா (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - வாணிஸ்ரீ
தபால்காரன் தங்கை
(புதியபிரதி)

மகத்தான 2-வது மாதம்
ஸ்ரீதர் (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - சுஜாதா நடித்த
உயர்ந்தவர்கள்

4-வது ஜனத்திரள் வாரம்
ராஜா (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார், ஜெயசித்திரா. நாகேஷ், சுந்தரராஜன் நடித்த
பயணம்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) கடைசி வாரம் தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சுஜாதா - கமலஹாசன் - சுமித்ரா
லலிதா

லிடோ (யாழ்.நகர்) போன்: 7696 தினசரி காட்சிகள்
விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தங்கவேலு
ஆசை அறுபதுநாள்

REGAL (Jaffna) ROMANIAN FILM FESTIVAL
From 29-1-79 to 3-2-79
Daily at, 4-30, 7-00 & 9-30 p. m.
WITH CLEAN HANDS
3-2-79 THE LUST OF GOLD

சாந்தி (யாழ்நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர் ... வீரப்பா ... சாவித்திரி
மகாதேவி (புதிய பிரதி)
5-2-79 முதல் கே. பாலசந்தரின் நான்கு சுவர்கள் கலர்

7-வது ஜனத்திரள் வாரம்
வின்ஸர் (யாழ்ப்பாணம்) போன்: 466 தினசரி 5 காட்சிகள்
10-00, 1-00, 3-45, 6-45, 9-45
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

வெஸ்லி (சாவகச்சேரி)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - மஞ்சுளா
எங்கதங்கராஜா

★ வீடு கட்டும் காணியில்

# தெய்வச் சிலைகள் கண்டெடுக்கப்பட்டன!

## கட்டட வேலைகள் நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முஸ்லிம் பகுதியில் நிலத்துக்கு அடியில், இரண்டரை அடி உயரமான கலையழகுமிளிரும் ஒரு கற்சிலையும், அரை அடி உயரமான தெய்வீக ஒளி வீசும் உலோகத்தினாலான ஒரு அம்மன் சிலையும், இரண்டு சங்குகளும் நேற்று நண்பகல் கண்டுபிடிக்கப்பட்டன.

யாழ் முஸ்லிம்பகுதியில் உள்ள கமால் ஒழுங்கையில் ஒரு பழைய வீட்டை இடித்துப் புதுப்பித்துக் கட்ட முயற்சித்தபோது, அத்திவாரத்தில் இச்சிலைகள் கண்டெடுக்கப்பட்டன.

### கற்சிலை

சிவனின் சிலையாக இருக்கலாம் என்று கருதப்படும் கற்சிலையில் பூநூல் மாதிரி ஆறுதனித்தனியாக மூன்று நூல்கள் வடிக்கப்படிருக்கின்றன. வரதகரமும், மறு கரத்தில் தண்டும் காணப்டுகிறது. கழுத்தில் அழகு மாலைகள் தெரிகின்றன. இச்சிலை ஆறு அங்குல அகலமுடையது.

### அம்மன் சிலை

ஆறு அங்குல உயரமுடைய உலோகத்தினலான மற்றைய சிலையில் மொத்தமாக எட்டுக் கரங்கள் காணப்படுகின்றன. தெய்வீக ஒளி வீசும் இச்சிலை எந்த உலோகத்தில் வடிக்கப்பட்டது என்பது உடனடியாகத் தெரியவில்லை. அம்மன் அல்லது காளியின் சிலையாக இருக்கலாம் என்று கருதப்பட்டது. இவற்றுடன்ஓரளவு சேதமடைந்த இரண்டு சங்குகளும் காணப்பட்டன.

### நண்பகல் நேரத்தில்......

இச்சிலைகளை முதலில் கண்ட கட்டிடத் தொழிலாளர்களான செல்வம், மணியம் ஆகிய இருவரும் நமது நிருபரிடம் தெரிவிக்கையில், அத்திவாரத்தைத் தாங்கள் வெட்டிக்கொண்டிருந்த நேரத்தில் நண்பகல் பன்னிரண்டு மணியளவில் முதலில் அம்மி என்று நினைத்துத் தோண்டியபோது முதலில் கருங்கல் சிலையும், அதனருகில் அம்மன் சிலையும் இரண்டு சங்குகளும் காணப்பட்டதாகக் கூறினர். இச்சிலைகள் இருந்த இடத்தில் முருங்கைமரமொன்று இருந்ததாம்.

ஒரு வெட்டு கற்சிலையில் விழுந்ததால், கற்சிலையின் கழுத்துத் துண்டிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் பொருத்தும் போது வெடிப்புத் தெரியவில்லை. தெய்வ அழகு அப்பட்டமாக மிளிருகிறது.

இக்காணி எம். ஏ. ஹக்கீம் என்பவருக்குச் சொந்தமானது. கமால் ஒழுங்கையிலிருந்து அறுபது அடி தூரத்தில் குறிப்பிட்ட காணியில் இச்சிலைகள் இருந்தன.

### கட்டட வேலை தடை

இவ்விஷயம் உடனடியாக யாழ். மாநகரசபை விசேட ஆணையாளர் திரு. கே. சிவஞானத்துக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் உடனடியாக ஸ்தலத்துக்கு விஜயம் செய்து, விபரங்களைத் தெரிந்து கட்டட வேலைகளைத் தடை செய்ததுடன் இரண்டு சிலைகளையும், சங்குகளையும் நேற்று மாலை தமது பொறுப்பில் எடுத்துக்கொண்டார்

இதுசம்பந்தமாகப் புதைபொருள் இலாகாவுக்கு தாம் அறிவிப்பதாகவும் இவற்றை இன்று அவர்களிடம் தாம் கையளிப்பதாகவும் ஆணையாளர் நேற்று மாலை 'ஈழநாடு' விடம் தெரிவித்தார்

சிலைகள் கண்டெடுக்கப்பட்ட விபரம் தெரிந்ததும் திரளான மக்கள்பார்வையிட்டனர்.

## பகிஷ்கரிப்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி

இவர்களுக்குப் பகிஷ்கரிப்பில் இருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தது.

### தொழில் நுட்பக்கல்லூரி

யாழ்ப்பாணத் தொழில் நுட்பக்கல்லூரிக்கு வந்த சில மாணவர்கள், சில மணிநேரத்தின் பின் திரும்பிச் சென்றுவிட்டனர். இதே நேரத்தில் பகல் பயிற்சிநெறி மாணவர்கள், தமிழ் சுருக்கெழுத்து, தட்டெழுத்து தேசியதொழில் பயிற்சி மாணவர்கள் வகுப்புகள் நடைபெற்றன.

மற்றைய வகுப்புகளுக்கு ம ணவர்கள் வந்திருந்தபோதிலும், நிறுவனத்திற்கு வெளியில் நின்றுவிட்டுச் சென்றனர்.

சில இடங்களில் பாடசாலைகளுக்கு முன்னால் மாணவர்கள் கூட்டம்கூட்டமாக நின்றனர். கொக்குவில் பகுதியில் மாணவர்கள் எவரும் வீதியில் காணப்படவில்லை.

இம்முறை எவரும், மாணவர்களைப் பாடசாலை செல்ல வேண்டாமென, பாடசாலை வாசல்களில் நின்று தடுக்கவில்லை. மாணவர்கள் தாங்களாகவே திரும்பிச் சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது

தனியார் கல்விநிலையங்களில் வகுப்புகள் வழக்கம்போல் நடைபெற்றன. மாணவர்கள் இவ்வகுப்புகளுக்குச் சென்றனர்.

யாழ்ப்பாண நகரத்திலுள்ள பிரபல கல்லூரிகளில் மாணவர்கள் குறைவாகவே காணப்பட்டனர்.

சென். ஜோன்ஸ் கல்லூரி 422 மாணவர்கள் [30 வீதம்] வந்திருந்தனர். கொக்குவில் இந்துக்கல்லூரியில் 56 மாணவர் மட்டும் வந்திருந்தனர். ஸ்ரான்லி மகாவித்தியாலயத்தில் 200 மாணவர் வந்திருந்தனர். சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் 190 மாணவிகள் வந்திருந்தனர், யாழ். இந்து மகளிர் கல்லூரியில் 25 வீதமும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில 30 வீதமும், கொன்வென்டில் 25 வீதமும், வேம்படி மகளிர் கல்லூரியில் 30 வீதமும் வந்திருந்தனர்.

யாழ். நகரத்திலுள்ள கல்லூரிகளின ஆசிரியர், மாணவர்களின் வருகை விபரம் நேற்றுக் காலை உடனடியாக வடமாநில வித்தியாதிபதி திரு. மாணிக்கவாசகருக்கு அறிவிக்கப்பட்டது.

யாழ். நகரத்திலுள்ள தனிப்பட்ட கல்விநிலையங்கள் நேற்று வழமைபோல் நடைபெற்றன. [ச]

# 7-ந் திகதி பூரண ஹர்த்தால்! இளைஞர்பேரவை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பெப்ரவரி 7ம் தேதி புதன் கிழமை தமிழ்ப்பிரதேசங்களில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு வர்த்தகர்களையும், பொதுமக்களையும் தமிழ் இளைஞர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது

தமிழ் இளைஞர் பேரவை நிர்வாக செயலாளர் திரு. எஸ். யோகநாதன் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது!

கீழே குறிப்பிடப்பட்டுள்ள அரசின் தவறான நடவடிக்கைகளை அம்பலப்படுத்துமுகமாக இம்மாதம் 7ம் திகதி புதன் கிழமையை பூரண ஹர்த்தால் தினமாக அனுஷ்டிக்கும்படி தமிழ் இளைஞர் பேரவை பொதுமக்களையும் வர்த்தகர்களையும் வேண்டுகின்றது இது தொடர்பாக இலங்கை கூட்டுறவு ஊழியர்சம்மேளனயாழ் பட்டணக்கிளைஎடுத்துள்ள தீர்மானத்தைவரவேற்கின்றதமிழ் இளைஞர் பேரவை: இது போன்ற ஒத்துழைப்பை சகல துறை தொழிலாளரும் வழங்குவதன்மூலம் ஆட்சியின் தவறான போக்கை வெளிப்படுத்த வேண்டுமெனக் கோருகிறது.

1. சர்வதேசநிதியம், உலக வங்கி ஆகிய ஏகாதிபத்திய நிறுவனங்களின் கட்டுபபாடுகள். சட்டதிட்டங்கள். வேண்டுதல்களுக்கும் பணிந்து இலங்கை மக்களின் கூப்பன்களைப் பறித்தும், விலைவாசிகளை ஏற்றியும் ஏராளமான பாமரமக்களின் வயிற்றில் அடித்துள்ளமை.

2. இலங்கைத் தொழிலாளர்களை வேற்றுநாட்டு முதலாளிகள் சுரண்டிக்கொழுக்க வசதியாக சுதந்திர வர்த்தக வலயத்தை அமைத்து அந்நிய ஏகாதிபத்தியங்களுக்கு இடமளித்துள்ளமை.

3. உள்ளூரில் உற்பத்தி செய்யக்கூடியதும் தன்னிறைவு பெறத்தக்கதுமான மிளகாய், வெங்காயம்: உருளைக்கிழங்கு மற்றும் பிடவை வகைகளையும் இறக்குமதிசெய்வதன்மூலம் உள்ளூர்உற்பத்தியாளர்களதும்: உள்ளூர் உற்பத்தித் தொழிலாளர்களதும் வாழ்க்கையை அழித்துள்ளமை.

4. மக்களது சுதந்திரத்தைப்பறிக்கும் சட்டங்களை இயற்றி பொலிஸ். இராணுவ அட்டூழியங்களுக்கு இடமளித்துள்ளமை.

5, தமிழ் ஈழம் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுபோல் அரசின் ஆயுதப்படைகளால் முற்றுகையிடப்பட்டுள்ளமை தமிழ்த் தேசிய இனத்தின் நியாயபூர்வமான உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளமை.

6 காசிஆனந்தன், மாவை சேனாதிராசா உட்பட பல இளைஞர்களை கைதுசெய்து காலவரையின்றி சிறையில் வைத்துள்ளமை,

7. இனவாரியான தரப்படுத்தலைப் புகுத்தியதன்மூலம் தமிழ்மாணவர்களின் கல்விக்கும் முற்றுப்புள்ளி வைத்துள்ளமை.

8. தரப்படுத்தலுக் கெதிராக அமைதியான முறையில் பாடசாலைப் பகிஷ்கரிப்பை நடத்துமுகமாக துண்டுப்பிரசுரம் விநியோகித்த மாணவர்களையும். துண்டுப்பிரசுரத்தை பார்வையிட்ட மாணவர்களையும் கைதுசெய்துள்ளமை.

மேற்படி அரசின்போக்கைக் கண்டிக்குமுகமாகவும் மாணவர்களது நியாயமான கோரிக்கைகளுக்கு ஆதரவு வழங்குமுகமாகவும் மாசி 7ம் திகதியை பூரண ஹர்த்தால் நாளாக அனுட்டிக்கும்படி பொதுமக்களையும் வர்த்தகர்களையும் தமிழ் இளைஞர் பேரவை வேண்டுகிறது மாசி 7-ம் திகதி பொதுமக்கள் அரசாங்க நிறுவனங்களுடன் உள்ள தொடர்புகளைக் குறைத்தும், போக்குவரத்துக்களைக் குறைத்தும் பூரண அமைதியான நாளாகக் காட்டுவதன் மூலம் தமிழினத்தின் ஒன்றுபட்ட எதிர்ப்பை அரசுக்குக் காட்டும்படி தமிழ் இளைஞர் பேரவை வேண்டுகிறது.

## கைதாகி விடுதலை!

(பருத்தித்துறை)

பாடசாலை பகிஷ்கரிப்புதுண்டுப்பிரசுரம் விநியோகித்ததாக பருத்தித்துறையில் 3 இளைஞர்கள் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு பின்னர்விடுதலை செய்யபபட்டனர் [க]

## சி,ஐ,டி......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யும் சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டனர்.

கொலையுண்ட சி ஐ டி சம்பந்தரின் சடலம் யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டு மரணவிசாரணைக்கான ஏற்பாடு செய்யப்பட்டது. கொக்குவில் புதிய கிராமசேவகராக நியமனம்பெற்ற பொ. பாக்கியராஜாவும் பொலிசாருடன் விசாரணைக்கான ஏற்பாடுகளைச் செய்தார்

கொக்குவில் பகுதியைச்சேர்ந்த சில வீடுகள் சோதனையிடப்பட்டுள்ளது, அப்பகுதியால் சென்ற வாகனங்களும் பலத்த சோதனைக்குள்ளாகின, சந்தேகநபர்கள் எவரும் இதுவரை கைதாகவில்லை. விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது,

(கொக்-கோண்டா)


## மரண அறிவித்தல்

### திருமதி சுகிர்தரத்தினம் கதிரவேலு

காரைநகரைச் சேர்ந்த சுகிர்தரத்தினம் கதிரவேலு காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற வழக்கறிஞர் கதிரவேலுவின் அன்பு மனைவியும், Dr பத்மராணி [மலாக்கா], காலஞ்சென்ற அப்பலவாணர், ரவிராஜ் [லண்டன்], Dr. ரதிராணி [லண்டன்], Dr விமலராணி [சிங்கப்பூர்], Dr. புகனேந்திரன் [சிங்கப்பூர்], அசோக்குமார் [ஈரான்] ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேஸ்வரி, சரஸ்வதி, Dr கமலா, [சிங்கப்பூர்], Dr. சுந்தரேசன் [லண்டன்], சுப்பிரமணியம் [தலைமை ஆசிரியர், சிங்கப்பூர்[ ஆகியோரின் மாமியாருமாவர். அன்னாரின் ஈமக்கிரியை 2-2-1979ந் திகதி, இலக்கம் 19. முதலாம் குறுக்குத் தெருவில் பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும். அன்னாரின் பூதவுடல் காரைநகர் வடக்கு மயானத்தில் தகனஞ்செய்யப்படும், உற்றாரும், உறவினரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். 1518

## மரண அறிவித்தல்

### ஆனந்தநடராசா ஞானசம்பந்தன் சி. ஐ- டி. பொலிஸ்

கொக்குவில் கோவில் வீதியைச் சேர்ந்த சி. ஐ. டி பொலிஸ் ஆனந்தநடராசா ஞானசம்பந்தன் அகால மரணமடைந்துவிட்டார். இவர் ஞானரஞ்சிதத்தின் அன்புக் கணவரும், ஞானகணேஷ், ஞானகனேஸ்வரி, ஞானேஸ்வரியின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று [02-02-79] வெள்ளிக்கிழமை மாலை 4-00 மணிக்கு கொக்குவில் கிழக்கு கோவில்வீதியிலுள்ள அன்னாரது ஸ்ரீகுகவாசா இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரிகைகளுக்காகத் திருநெல்வேலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். 1519

## திருமண அழைப்பு

மணமகன்:

திருநிறை செல்வன் நிமலன்.

மணமகள்:

திருநிறை செல்வி சந்திரலோஜினி

திருமணநாள்: 9-2-79 வெள்ளிக்கிழமை

மாலை 6-00 முதல் 7-30 வரை.

இடம்: யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம்.

அன்பர்களையும், நண்பர்களையும், உறவினர்களையும் வருகைதருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கா. பொ. இரத்தினம் (பா. உ.)
திருமதி இரத்தினம்.
வேலணை.

'வைத்திய கலாநிதி'
த. க. சிவஞானம்
திருமதி சிவஞானம்.
(யாழ். பரணி மருந்துச்சாலை)
கோண்டாவில் மேற்கு.

1507


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 2-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General PostOffice The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu, Telephone 389, Registered as a News paper n Sri Lanka.